**மினுவங்கொட நகர சபை - 2023**

**-----------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

மினுவங்கொட நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181 (1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மினுவங்கொட நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் இலக்கம் 3.28 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களின் EG 6.2 இற்கு இணங்க செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் ஏற்பட்ட காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது மீளாய்வாண்டின் மிகைக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய சீராக்கல்களின் போது நீண்ட காலக் கடன் பெறுவனவு கிரயமாகிய ரூபா 259,512 தொகை மீண்டும் சீராக்கல் செய்யப்படாததுடன், ரூபா 3,892,404 | ஏற்றுக்கொள்கின்றேன். | நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இற்கான சீராக்கல்கள் எவை என கண்டறிய முடியவில்லை. | | |
| (ஆ) | நியமத்தின் இலக்கம் 3.29 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.3 இற்கு இணங்க முதலீட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் கிடைத்த காசுப்பாய்ச்சல் கணிக்கும் போது நிலையான வைப்புக்களில் பணமாக முதலீடு செய்யப்பட்ட ரூபா 27,000,000 தொகை காட்டப்பட்டிருக்காததுடன், ஆண்டின் போது கிடைத்த வட்டி என ரூபா 5,424,917 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2024.12.31 திகதியில் உள்ளவாறு இறுதிக் கணக்குகளுடன் சரி செய்து சமர்ப்பிக்கப்படும் என. | நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் தயாரிக்க வேண்டும். |
| (இ) | நியமத்தின் இலக்கம் 3.30 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.4 இற்கு இணங்க நிதித் தொழிற்பாடுகளின் மூலம் ஏற்பட்ட காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது பெறவேண்டிய மூலதனச் செலவு மானியத்தின் பெறுமதியாகிய ரூபா 2,588,613 தொகை கிடைக்கப்பெற்ற மூலதன மானியம் என காட்டப்பட்டிருந்ததுடன், நீண்ட கால கடனுக்காக செலுத்திய வட்டியின் பெறுமதி ரூபா 218,223 தொகை காட்டப்பட்டிருக்கவில்லை. | 2024.12.31 திகதியிலுள்ளவாறு காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக கணக்கீடு செய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என. | நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் தயாரிக்க வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை கிடைத்திருந்த சாக்கடை பவுசர் கட்டணம் ரூபா 323,990 தொகை மற்றும் மீளாய்வாண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 1,735,640 தொகை முன்னைய ஆண்டுகளின் மற்றும் மீளாய்வாண்டின் வருமானம் என கணக்கீடு செய்வதற்கு பதிலாக பலவின வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2022 மற்றும் 2023 ஆண்டு தொடர்பாக புதிய கடையறைகளின் ஒரே தடவையில் பெறும் பண வருமானம் முறையே ரூபா 19,200,000 தொகை மற்றும் ரூபா 11,497,500 தொகை | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | முன்னைய ஆண்டின் மற்றும் மீளாய்வாண்டின் வருமானங்கள் என கணக்கீடு செய்வதற்கு பதிலாக பலவின வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 5,445,455 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு நிலையான வைப்புக்களின் மீதி ரூபா 32,424,917 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | அகல்விரிவான வருமானக் கூற்றில் ஏனைய அகல்விரிவான வருமானத்தின் கீழ் மீளாய்வாண்டிற்காக கிடைத்திருந்த மூலதனச் செலவு மானியம் ரூபா 100,166,260 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொடுப்பனவு செய்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த 08 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,712,174 இற்கான செலுத்த வேண்டிய ஏற்பாடுகளுக்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 14 கணக்கு விடயங்களில் நிதிக் கூற்றுக்களின் படி மீதிகள் மற்றும் அட்டவணைகளின் கூட்டுத்தொகை இடையே ரூபா 74,263,303 இற்கான இணங்காத வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டு சரி செய்யப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. | | | |
| (அ) | நிலுவை சந்தைக் கட்டணம் | 416,610 | விரிவான அட்டவணை | 2024.12.31 திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் | அட்டவணைகள் சரியாக சமர்ப்பிப்பதற்கு |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும் என. | | | நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஆ) | நேர் வங்கி அனுப்புதல்கள் 2023/11/30 திகதியில் உள்ளவாறு மீதி | 2,257,242 | விரிவான அட்டவணை | - | மேற்படி | - | - | மேற்படி | - |
| (இ) | பொருத்துக்கள் | 4,275,353 | விரிவான அட்டவணை | - | மேற்படி | - | - | மேற்படி | - |
| (ஈ) | கணினி மென்பொருள் | 70,849 | விரிவான அட்டவணை | - | மேற்படி | - | - | மேற்படி | - |
| (உ) | பாதைகள் மற்றும் மதகுகள் | 51,210,447 | விரிவான அட்டவணை | - | மேற்படி | - | - | மேற்படி | - |
| (ஊ) | நீண்ட காலக் கடன் வட்டி | 671,591 | உறுதிப்படுத்தல் கடிதம் | - | மேற்படி | - | - | மேற்படி | - |

### 1.7 இணங்காமை

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் அத்தியாயம் VII பிரிவு 38(2) | நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுகின்றது எனவும், அந்த முறைமையை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமையை வெற்றிகரமாக நடாத்திச் செல்லப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்பட வேண்டிய எழுத்துமூல மீளாய்வொன்றின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டு முதல் எழுத்துமூல மீளாய்வொன்றின் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும் என. | குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவுகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | மாநகர சபை நிதி நிருவாகம் தொடர்பான கணக்கு அலுவல்கள் தொடர்பான விதி 322 | விதியின் ஏற்பாடுகளுக்கு முரணாக 4 கடையறைகள் வாடகைக்கு கொடுப்பதற்காக தலைவர், உப தலைவர் மற்றும் 05 மந்திரிமார் அடங்கிய டென்டர் குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. | டென்டர் குழு தற்போது நியமனம் செய்யப்பட்டு வருடாந்தம் விலைகூறல் அழைப்பு மேற்கொள்ளப்படுகின்றது என. | குறிப்பிட்ட விதிக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 104(3), 110 | 2022 மே 09 திகதி நாட்டில் ஏற்பட்ட கலவர நிலைமையின் காரணமாக சபைத் தலைவரின் வீடு தீப்பற்றியதினால் அவரின் கடமை அலுவல்களுக்காக வழங்கப்பட்டிருந்த மடி கணினி, டொங்கல் மற்றும் தரக் களஞ்சிய வன்பொருள் அழிவடைந்தமையால் ரூபா 311,390 தொகைக்கான நட்டத்திற்கு பொறுப்பான தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் நட்டம் தொடர்பான அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு ஆரம்ப விசாரணை அறிக்கையுடன் கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது என. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணத்திற்கு அமைய செயற்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் VIII இன் 9:1 | முறையான நியமனக் கடிதம் ஒன்று இன்றி பதில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கு 2022 செப்தம்பர் மாதம் முதல் 2023 ஜூலை மாதம் வரை விடுமுறை நாள் சம்பளம் என ரூபா 121,827 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இது வரை அந்த அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை என. | குறிப்பிட்ட அத்தியாயத்திற்கு இணங்க வேண்டும். |
| (உ) | 2009 ஜூன் 17 திகதிய 09/2009(I) இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | பதில் கடமை செயலாளரினால் 2023 ஜனவரி முதல் ஜூலை வரை 141 கடமை நாட்களில் 90 நாட்களுக்காக மாத்திரம் விரல் அடையாள இயந்திரத்தில் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் பதிவு செய்யப்பட்டிருந்தது. | பதில் கடமை செயலாளரினால் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |
| (ஊ) | 2016 நவம்பர் 09 திகதிய LGD/13/2016 இலக்கம் கொண்ட உள்ளூராட்சித் திணைக்கள சுற்றறிக்கை | 2015 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டின் பின்னர் புதிய பெறுமதி மதிப்பீட்டுக்காக 7 வருடங்கள் கடந்த காரணத்தினால் சனச பிரீடம் பார்க் வர்த்தக கட்டிடத் தொகுதியில் கடையறைகளில் | சபைக்கு சொந்தமான கடையறைகளுக்காக மூன்று வருடங்களுக்கு ஒருமுறை அரச பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொள்வதற்கும், குறிப்பிட்ட பெறுமதி | - மேற்படி - |

| | |
|---|---|
| இருந்து புதிய பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியுடன் இணக்கஞ் செய்த போது 04 வருடங்களுக்காக அண்ணளவாக ரூபா 2,510,400 இற்கான வாடகை வருமானமொன்று இழக்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டினை செயற்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 13,239,491 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 26,580,197 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| வீதவரி மற்றும் வரி | 20,751 | 20,346 | 16,900 | 13,351 | 20,515 | 20,474 | 14,319 | 14,577 |
| வாடகை | 67,006 | 22,417 | 21,298 | 2,657 | 40,675 | 29,640 | 27,326 | 2,370 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 901 | 367 | 442 | 16 | 846 | 723 | 686 | 37 |
| ஏனைய வருமானங்கள் | 31,525 | 11,610 | 11,610 | - | 24,925 | 31,957 | 31,957 | - |
| | ---------- | ---------- | ---------- | ----------- | ---------- | ----------- | ----------- | ----------- |
| | 120,183 | 54,740 | 50,250 | 16,024 | 86,961 | 82,794 | 74,288 | 16,984 |
| | ====== | ====== | ====== | ====== | ===== | ====== | ====== | ====== |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **வீதவரி வரி** | | |
| (அ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருடத்திற்கும் 08 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சில் காணப்பட்ட ரூபா 50,000 ஐ விட மிகையான 32 வீதவரி அலகுகளில் இருந்து நிலுவை வீதவரி கூட்டுத்தொகை ரூபா 3,236,036 தொகை காணப்பட்டது. | 2023.09.30 திகதி முதல் 2023.12.31 திகதி வரை நிலுவைத் தொகை குறைந்திருந்ததுடன், காலாண்டு இறுதியில் நிலுவைத் தொகை குறைவடைந்து திருத்தப்பட்டிருந்ததென. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீதியான நிலுவை வீதவரி ரூபா 9,090,211 தொகை காணப்பட்டதுடன், 05 வருடங்களை விட மிகையான ரூபா 4,300,436 இற்கான நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு அல்லது ஆதனங்களை தடை செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டதென கண்டறியப்படவில்லை. | வருமானம் அறவீடு செய்தல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், ஆதனங்களை தடைசெய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு நிலுவைத் தொகையில் ரூபா 635,322 இற்கான தொகையொன்று சபையினால் அறவீடு செய்யப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஜனவரி 27 திகதிய இலக்கம் 2264/18 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் ‘‘ஈ’’ பகுதியின் படி சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என சபையினால் 2023 கணிப்பீட்டு அறிக்கையின் படி இனங்காணப்பட்ட 5 நிறுவனங்களுக்காக கணக்காய்வு திகதியாகிய 2023 செப்தம்பர் 01 திகதி வரை சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய அனைத்து நிறுவனங்களையும் இனங்காணல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டிற்குரிய கணிப்பீடு 2023.09.01 திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அனைத்து நிறுவனங்களையும் இனங்காண்பதற்காக கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 164(4) இன் படி 164 பிரிவிற்கு முரணாக 2023 திசெம்பர் 31 திகதி | வியாபார அனுமதிப்பத்திரம் செலுத்தாத 5 நிறுவனங்கள் வருமானப் | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் தொடர்புடைய பிரிவின் படி செயற்பட |

| | | | |
|---|---|---|---|
| | அளவில் வியாபார அனுமதிப்பத்திரம் இன்றி 33 நிறுவனங்களும் வர்த்தக வரி மற்றும் கைத்தொழில் வரி செலுத்தாத 69 நிறுவனங்களும் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பரிசோதகர்களினால் அறவிடக் கூடிய நிறுவனங்கள் என இனங்கண்டு 2024 ஆண்டின் ஜனவரி 31 திகதி அளவில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | வேண்டும். |
| (இ) | இரண்டு நிறுவனங்கள் தொடர்பாக 17 விளம்பர அறிவித்தல் பலகைகளில் 08 பலகைகளுக்காக கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | 2024 அறிவித்தல் பலகைகளுக்கான ஒரு வருடத்திற்கான கட்டணத்தை எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சரியாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கட்டணம் அறவிடப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிவ்ஹெம் பாதை ஆரம்பிக்கும் இடத்தில் காணப்படும் சபைக்கு சொந்தமான வாகனத் தரிப்பிடம் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 2019 ஆண்டிலேயே வாடகைக்கு பெற்றிருந்தவர் அந்த இடத்தில் 10 தற்காலிக கடையறைகள் நிர்மாணித்து 2020 ஆண்டு முதல் 03 வருட காலத்திற்காக வேறு தரப்பினருக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கைக்கு இணங்க சபையினால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடையறைகளை வாடகைக்கு கொடுப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரம் 03 வருடங்களுக்கு மாத்திரம் கிடைக்கப் பெற்றிருந்தமையால் மீண்டும் உடன்படிக்கை மேற்கொள்ளல் தொடர்பாக ஏற்பட்டிருந்த சிக்கல் தன்மையின் காரணமாக உடன்படிக்கை மேற்கொள்ளல் தொடர்பான விடயங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என. | உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபையின் உடல்நல விருத்தி நிலையத்திற்காக ஜிம் காபட் கொள்வனவு செய்யும் போது தெரிவு செய்யப்பட்டிருந்த நிறுவனத்தினால் வழங்கியிருந்த கூறுவிலையின் படி 2 X 2 (10 மி.மி) அளவான ஜிம் காபட் இன் அலகு விலை ரூபா 4,950 தொகை என கண்டறியப்பட்டதுடன், அந்த நிறுவனத்திற்கு சபையினால் சதுரஅடி 1 இற்கான ரூபா 1,100 வீதம் 1063.9 சதுரஅடிகளுக்காக ரூபா 1,170,290 தொகை | வழங்கும் தரப்பினரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகள் 2023.03.07 திகதி திறக்கப்பட்டது. பின்னர் அவர்களினால் வழங்கப்பட்ட கூறுவிலைகளின் மாற்றங்கள் காரணமாக சபையினால் மிகையாக செலுத்தியிருத்தல் சிக்கல் தன்மையுடையதாகும் என. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வினால் அந்த நிறுவனத்தில் இருந்து எழுத்துமூலம் பெற்றுக்கொண்டிருந்த கூறுவிலைகளின் படி 1 சதுர அடியின் விலை ரூபா 792 தொகையாக காணப்பட்டமையால் சபை 1 சதுர அடிக்கு ரூபா 308 வீதம் (ரூபா 1100- ரூபா 792) 1063.9 சதுர அடிகளுக்காக ரூபா 327,681 தொகை மிகையாக செலுத்தியிருந்தது என அவதானிக்கப்பட்டது. | | |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபைக்கு வெளியே இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த உத்தியோகத்தர்களிடம் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 617,521 தொகை, இறந்த உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 270,644 தொகை, எப்போதிருந்த காணப்படுகின்ற மீதிகள் என காட்டப்பட்டிருக்காத ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 153,339 தொகை 2022 ஆண்டின் போது வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடம் ரூபா 177,135 தொகை மற்றும் சேவையை விட்டுச் சென்றிருந்த 3 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 336,054 தொகை மீளாய்வாண்டின் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடன்மீதிகளை அறவீடு செய்யப்பட்டு வருகின்றது என. | நிலுவைக் கடன் மீதி அறவிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 மே 11 திகதி முதல் தகன கூடத்தின் 2 பேர்னர்கள் செயற்படாமல் ஒரு வருடத்திற்கு மேலான காலம் முதல் திருத்த வேலை மேற்கொள்ளப்படாமல் சவங்கள் சுடும் அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதினால் விஷப் புகை மீண்டும் சுடப்படாமல் சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுகின்றமையால் சுற்றாடல் மாசடைதல் தவிர்க்க முடியாதுள்ளது. | இந்த திருத்த வேலை அலுவல்கள் தாமதம் அடைந்துள்ளது. எவ்வாறாயினும் பிரதேசத்தின் கொரோனா சடலங்கள் தகனம் செய்வதற்கு நகர சபைக்கு நேரிட்டிருந்தது. | சுற்றாடல் மாசடைதலை தவிர்ப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |